


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.6.2025) முகாம் அலுவலகத்தில், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.6.2025) மாமல்லபுரத்தில் நடைபெற்ற – நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனி அவர்களின் மகன் அப்சர் ரீஷ்மான் – அப்ரா ஆகியோரது திருமண விழாவில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம்! திட்டக்குடி - விருத்தாசலம் - நெய்வேலி - பண்ருட்டி- சட்ட மன்றத் தொகுதி கிளைக் கழக செயலாளர்கள் BLA2 & பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்

# தகவல் தொழில் நுட்ப அணி, இளைஞர் அணி கழக சார்பு அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



கடலூர் ஜூன் 15-

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.வெ. கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தாசலம் பண்ருட்டி, நெய்வேலி ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிளைக் கழக செயலாளர் BLA2 & BDA (பூத் டிஜிட்டல் ஏஜென்ட்) தகவல் தொழில் நுட்ப அணி, இளைஞர் அணி, கழக அனைத்து சார்பு அணி ஆகிய நிர்வாகிகளின் கூட்டம் இன்று (15.06.2025-ஞாயிற்றுக்கிழமை) எனது (சி.வெ. கணேசன்) தலைமையில் அந்தந்த தொகுதி பொறுப்பாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

அதன் விவரம் வருமாறு:

1. திட்டக்குடி தொகுதி காலை: 10 மணி இராமலிங்கம் அஞ்சுகம் திருமண மண்டபம், திட்டக்குடி 2. விருத்தாசலம் தொகுதி காலை: 11.30 மணி சண்முகம் ராஜட்சுமி திருமண மண்டபம் விருத்தாசலம். 3. பண்ருட்டி சட்டமன்ற தொகுதி மாலை:3 மணி சுசிலா சீனுவாசன் திருமண மண்டபம், பண்ருட்டி 4.நெய்வேலி சட்டமன்றத் தொகுதி மாலை: 4 00 மணி இடம்: கே.என்.டி மஹால் நெய்வேலி. ஆகிய இடங்களில் நடைபெறுகிறது அது சமயம், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், கிளை கழக செயலாளர்கள் BLA2 & BDA (பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்) அனைவரும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சி.வெ. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட

# அதிநவீன 7 இலட்சம் லிட்டர் தானியங்கி பால் பதப்படுத்தும் தொழிற்சாலை!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பார்வையிட்டார்!

**சேலம், ஜூன்.15–**

**முதலமைச்சர் அவர்களால் கடந்த 12.06.2025 அன்று சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் சேலம் ஆவினில் திறந்து வைக்கப்பட்ட அதிநவீன 7 இலட்சம் லிட்டர் தானியங்கி பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் புதிதாக பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி வளாக கட்டடம் ஆகியவற்றை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா. பிருந்தா தேவி முன்னிலையில் நேற்று (14.06.2025) நேரில் பார்வையிட்டார்.**

இந்நிகழ்விற்குப்பின், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:-

முதலமைச்சர் அவர்கள் 12.06.2025 அன்று சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் சேலம் மாவட்டத்தில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்ட பணிகளை தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவில் சேலம் ஆவினில் ரூ.52.80 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட, அதிநவீன 7 இலட்சம் லிட்டர் தானியங்கி பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் புதிதாக பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி வளாக கட்டடத்தினையும் திறந்து வைத்தார்கள்.

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் நாளொன்றிற்கு சுமார் 6.35 லட்சம் லிட்டர் பாலை 784 தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மூலமாக 48,000 பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து பால் மற்றும் பால் உபபொருட்களை நுகர்வோருக்கு வழங்கி வருகிறது.

தற்பொழுது சேலம் ஒன்றியத்தில் அதிகரித்து வரும் பால் கொள்முதல், பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையை கருத்தில் கொண்டு நுகர்வோர்களுக்கு தங்கு தடையின்றி பால் மற்றும் பால் பொருட்களை தொடர்ந்து வழங்கிட ஏதுவாக தமிழ்நாட்டிலேயே 7 லட்சம் லிட்டர் பால் அதிக கொள்திறன் கொண்ட மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தும் அதிநவின தொழில் நுட்பத்துடன் சேலம் ஒன்றிய வளாகத்தில் புதிதாக ரூ.51.62 கோடி திட்ட மதிப்பில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.06.2025 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தானியங்கி முறையில் செயல்முறை இயந்திரங்களை துல்லியமாக இயக்குவதன் மூலம், பால் திட இழப்புகள் குறைந்தபட்சமாக இருக்கும். மேலும், பால் உற்பத்தியாளர்களிடம் கிடைக்கும் அனைத்து உபரி பாலையும் கொள்முதல் செய்ய இயலும். இதன் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான விலையை உறுதி செய்யமுடியும். மேலும், அடுத்த 5 ஆண்டுகளில் கொள்முதல் 8.16 இலட்சம் லிட்டராகவும், பால் விற்பனை 3.6 இலட்சம் லிட்டராகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஏற்றுமதி தர நிலைகளை பூர்த்தி செய்யும் வகையில் பால் பொருட்களை மிக உயர்ந்த தரத்தில் உற்பத்தி செய்து பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை மேம்படுத்த ஏதுவாக இத்தொழிற்சாலை அமைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு வருடமும் பயிற்சி கால அட்டவணை தயார் செய்து செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் முதலுதவி பயிற்சி, தூய பால் உற்பத்தி பயிற்சி, பால் பண்ணை தொழில்நுட்பம், இயந்திரவியல், தரக்கட்டுப்பாட்டு பணியாளர் பயிற்சி, பிரதமசங்க பணியாளர்களுக்கு தொகுப்பு பால் குளிர்விப்பான் கையாளுதல் பயிற்சி, பால் பரிசோதனை கருவிகள் பயிற்சிகள் சேலம் மற்றும் இணை ஒன்றிய பால் உற்பத்தியாளர்கள், அலுவலர்களுக்கு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சிகளில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை திட்டத்தின் கீழ் அனைத்து வசதியுடன் கூடிய புதிதாக பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி கட்டடம் ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு முதலமைச்சர் அவர்களால் 12.06.2025 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. சேலம் ஆவினில் முதலமைச்சர் அவர்களால் ரூ.52.80 கோடி மதிப்பில் திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் செயல்பாடுகள் குறித்து இன்றைய தினம் நேரில் பார்வையிடப்பட்டது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் / ஆவின் பொது மேலாளர் ப.குமரேஸ்வரன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள், பணியாளர்கள் உடனிருந்தனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கி ஒன்றிய-நகர-பகுதி-பேரூர்களில் தெருமுனைக் கூட்டங்கள்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

திருச்சியில் நடைபெற்ற கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு, அனைத்து ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன.

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் இக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறும், அதற்கு மாவட்ட–மாநகர–ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் கழகச்செயலாளர்கள் ஒத்துழைப்பு நல்குமாறும், இக்கூட்டங்கள் சிறப்பாக நடைபெறுவதை மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட–மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உறுதி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 14-06-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



முதலமைச்சர் அவர்களால் கடந்த 12.06.2025 அன்று சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் சேலம் ஆவினில் திறந்து வைக்கப்பட்ட அதிநவீன 7 இலட்சம் லிட்டர் தானியங்கி பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் புதிதாக பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி வளாகக் கட்டடம் ஆகியவற்றை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி முன்னிலையில் நேற்று (14.06.2025) நேரில் பார்வையிட்டார்கள். உடன், மாவட்ட வருவாய் அலுவலர்/ஆவின் பொது மேலாளர் பி.குமரேஸ்வரன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளனர்.

